# ஆய்வுப் பகுதி

இயல் 0

# முன்னுரை

0.0 தமிழ் மகளிரின் நிலை பற்றிய சிந்தனை அண்மைக்காலமாகப் பெருகி வருகிறது. இது, பெரும்பாலும் சொற்பொழிவுகளிலும், கட்டுரை வடிவிலும், நூல் வடிவத்திலும் ஆங்காங்குப் பலபடியாக அமைந்திருக்கிறது. எனினும், வரலாற்றியல் சார்ந்த அவரின் சமுதாய மதிப்பினை ஆய்வு நோக்கில் ஆழச் சென்று காண்பது, இன்றைய பெண் முன்னேற்றச் சிந்தனை வழித் திட்டங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

## 0.1 ஆய்வுப்பொருள் :

"பெருங்காப்பியங்களில் மகளிரின் சமுதாய மதிப்பு" என்பது ஆய்வுப்பொருளாக அமைகிறது. பெருங்காப்பியங்கள் என்ற வரையறை தமிழ் இலக்கிய வரலாற்றில் மரபு வழியில் குறிப்பிட்ட இலக்கியங்களைக் குறிப்பிடுகின்றது. அந்த வரையறையே இந்த ஆய்வில் மேற்கொள்ளப்படுகின்றது. மகளிர் பற்றிய ஆராய்ச்சி இன்று பெருகி வருகின்றதெனினும், தமிழ்ப் பெருங்காப்பியங்களை அடித்தளமாகக் கொண்டு அற்றைக் காலத்து மகளிர் தம் சமுதாய மதிப்பினை யாரும் இதுகாறும் முழுமையாக ஆய்வு செய்யாததால், இவ் ஆய்வு தமிழ்ச் சமுதாய மரபில் பெண்ணியச் சிந்தனைக்கு உறுதுணை செய்கின்ற பொருளாக அமைகின்றது.

## 0.2 கருதுகோள் :

இருபாலாருக்கும் இடையே சமத்துவம் நிலவுவது ஒரு சமுதாயத்தின் உயர்நிலைக்கு அறிகுறியாக அமையும். ஆனால், நடைமுறையில் ஆணைவிடப் பெண் தாழ்ந்தவளாகவே நடத்தப்பட்டு வந்திருக்கிறாள். இது, தமிழ் இலக்கியங்களில் ஊடிழையாக அமைந்திருக்கிறது. இது, ஒரு பொதுவான கருத்து நிலை. இதுவே, இவ்ஆய்வின் கருதுகோளாக அமைகிறது.

## 0.3 ஆய்வு எல்லை :

இலக்கிய வரலாறு, ஐம்பெரும் காப்பியங்களாகச் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவற்றைச்

சொல்லுகிறது. இதுவே, ஆய்விற்குரிய தளமாக இங்கு வரையறை பெறுகிறது. மேலும், ஐம்பெருங்காப்பியங்களில் பலவிதமான கோணங்களும்,· பொருட்களும், சிந்தனைகளும், இருப்பினும், இங்கு மகளிர் மதிப்புப் பற்றிய சிந்தனை மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது.

## 0.4 சான்றாதாரங்கள் :

ஆய்வில் சிலப்பதிகாரம், மணிமேகலை,சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி எனும் ஐந்து நூல்கள் முதன்மை நூல்களாக அமைகின்றன. இக்காப்பியங்களைப் பற்றிய ஆய்வுகளும், பெண்ணியம் பற்றிய கோட்பாடுகளும், பெண்ணியவழி ஆய்வுகளும், துணைமை ஆதாரங்களாக இடம் பெறுகின்றன. மேலும், இவற்றிற்குத் துணைபயக்கும் பிற இலக்கியங்களும், ஆய்வுக்குத் துணையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## 0.5 அணுகுமுறை :

காப்பிய மாந்தர் வழியிலான கருத்துக்கள் உள்ளடக்க ஆய்வு அணுகுமுறையில் இங்கு ஆராயப்படுகின்றன. பதினெண்மேல், கீழ்க்கணக்கு நூல்களில் மகளிரின் சமுதாய மதிப்புக்களை ஆங்காங்கே எடுத்துக்காட்டி அவற்றில் இருந்து ஆய்வு எல்லையில் குறிப்பிடப்பட்டுள்ள மகளிரின் சமுதாய மதிப்புக்கள் ஒப்பிடப்பட்டு இவ்ஆய்வு பேசுகின்றது. அத்துடன் ஐம்பெருங்காப்பியங்களின் இடையேயும் ஆய்வின் பொருள் ஒப்பிடப்படுகிறது. ஆய்வு எல்லையில் அமைந்த மகளிரின் சமுதாய அமைப்பு, திருமணம், குடும்பம், சமயம் எனும் மூன்று நிறுவனங்களில் அமைந்துள்ள பான்மை ஆய்வில் விளக்கப்படுகிறது.

காப்பியகாலத்துச் சமுதாயத்தை ஒப்பிட்டும் தனியாகவும் விளக்கமாக ஆராய்ந்தாலும், அடிப்படையில், இவ் ஆய்வு, பெண்ணியம் என்ற கோட்பாடு சார்ந்த அணுகுமுறையாகவே கருதத்தகுந்தது. சமுதாயத்தை ஓர் அமைப்பாக எடுத்துக் கொண்டு அதற்குள் பெண் எவ்வாறு இடம் பெறுகிறாள் ; இயங்குகிறாள் ; எவ்வாறு ஆண் அவளை அணுகுகின்றான் ; குறிப்பிட்ட சமுதாய அமைப்பில் அவளுடைய விழுமியங்கள் அல்லது மதிப்புக்கள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பவற்றை – அதாவது, பெண்ணை மையமாகக் கொண்டு இவ் அணுகுமுறை அமைகிறது. மனிதகுலம் என்ற பெருவெளியில்

பெண்ணிற்கும் ஒரு முக்கியமான இடம் உண்டு ; அவளுக்கு ஆளுமை உண்டு என்ற சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது இவ் அணுகுமுறை.

## 0.6 இயல்பகுப்பு :

முன்னுரையும், இறுதியில் அமைந்த முடிவுரையும் உட்பட இவ்ஆய்வு ஏழு இயல்களைக் கொண்டுள்ளது. அவை :

1. முன்னுரை.
2. கற்பில் மகளிர்.
3. திருமணத்தில் மகளிர்.
4. குடும்பத்தில் மகளிர்.
5. சமயத்தில் மகளிர்.
6. பரத்தமையில் மகளிர்.
7. முடிவுரை.

"கற்பில் மகளிர்" எனும் முதல் இயல், நிலவுடைமையின் உச்ச நிலையான முடியரசாட்சியின் உடைமைச் சமுதாயத்தில், குலமகளிர்க்கு "ஒருத்திக்கு ஒருவன்" எனும் கற்புக்கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளமையையும், "ஒருவனுக்கு ஒருத்தி" என மறுதலையாக கற்புக்கொள்கை ஆணுக்கு வற்புறுத்தப்படாமையையும் சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் கற்புவரையறைக்குள் நில்லாது ஆடவரின் பாலியல் நுகர்விற்காகவே சிலபல சலுகைகள் ஏற்கப்பட்டு அவை காலப்போக்கில் உரிமைகளாக மாறியிருப்பதைக் காணமுடிகிறது. எனவே, மகளிர் வாழ்வில் கற்பின் பங்கைக் கண்டறிவது இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

"திருமணத்தில் மகளிர்" எனும் இயலில், திருமணத்தில் பெண்ணின் மதிப்பு ஆராயப்படுகிறது. திருமணம் மகளிர்க்கு அவசியமானதாகப் பேசும் காப்பியக் குறிப்புகள் உள. ஆண் மணமாகாமல் வாழ்வது குறித்து எதிர்ப்பு எதுவும் அங்கு இல்லை. ஆனால், பெண் மணமாகாது வாழ்வது கடியப்படுகிறது. எனினும், காப்பியங்களில் இருவகை வாழ்வினரும் இடம் பெறுகின்றனர். அவர்தம் மதிப்பு இங்குக் கணிக்கப்படுகிறது.

"குடும்பத்தில் மகளிர்" எனும் அடுத்த இயல், காப்பிய காலக் குடும்பங்களைக் குல, மண அடிப்படையில் பிரித்து, அன்றைய மகளிரின் சமுதாய

மதிப்பினை அவற்றின் கீழ் ஆய்கிறது. அங்கு ஆணுக்கு அல்லாது, பெண்ணுக்கு மட்டுமே அமைந்திருந்த, அவளது வாழ்வுக்கு பல வகையில் சேதம் விளைத்த சூழல்கள் தெளிவாக்கப்படுகின்றன. இவை கல்வியில் ... போன்ற பதினொரு பக்கத் தலைப்பின் கீழ் ஆராயப்படுகின்றன.

"சமயத்தில் மகளிர்" எனும் இயல், பெண் துறவியர் பற்றிய ஆய்வினை மேற்கொள்கிறது. கைம்மை வாழ்வு எனும் தொடர் துயர்க் கொடுமைக்கு ஒருதலை விடிவாகத் துறவு கைம்பெண்ணிற்கு அமைந்தமை விளக்கப்படுகிறது. அத்துடன் துறவு வாழ்விலும் ஆணுக்கும் பெண்ணுக்குமான உரிமைகள் மாறுபட்டு இருப்பதும் தெளிவுறுத்தப்படுகின்றன.

"பரத்தமையில் மகளிர்" எனும் இயல், விலைமகளிர் பற்றிய ஆய்வினை மேற்கொள்கிறது. காப்பியகாலத்தில் குலமகளிர்க்கு உரிய கற்புக்கொள்கைகளுக்குப் புறம்பாக வாழுமாறு விதிக்கப்பட்ட விலைமகளிர் நிலையும், அவர்கள், குலமகளிர்க்கும், குடும்ப வாழ்விற்கும் இடையூறாக அமைந்தமையும் இங்கு விளக்கப்படுகின்றன.

"முடிவுரை" எனும் இயலில், ஆய்வின் முந்தைய இயல்களில் அலசப்பட்டு அங்குக் கண்டறியப்பட்ட மெய்ம்மைகள், மனித நேயம் வழிப்பட்ட பொதுவாகப் பெண்ணிய வழிச்சிந்தனையில் நோக்கில் தொகுக்கப்பட்டுள்ளன. ஆண் பெண் சமத்துவமின்மை பால், வருணம், சாதி, சமயம் அடிப்படையில் இனம் பிரித்துக் காட்டப்படுகின்றன. சமத்துவத்தும் இன்மையின் காரணமாகப் பெண்டிர் வாழ்வு, சிக்கலுக்கும் சிதைவுக்கும் ஆளானமை தெளிவுபடுத்தப்படுகிறது. அச்சிதைவு மனிதகுலத்திற்கே பேரிழப்பாக வளர்ந்துள்ளமையும் உணர்த்தப்படுகிறது.

ஆய்வின் உடல்பகுதியில் பட்டியலிடுதல், வரைபடம் இணைத்தல், அட்டவணை அமைத்தல், அங்கங்கேயே நகவளைவில் மேற்கோள்களை இணைத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கோள்கள் எடுக்கப்பட்ட நூல்களில் இருந்து சற்றும் மாற்றப்படாமல் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளன. சொல், வாக்கிய, இலக்கணப் பிழையோடு அமைந்துள்ள சில மேற்கோள்கள் பிழைகள் களையப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கில மேற்கோள்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன.

இறுதியில் பின்னிணைப்பில் துணைநூற்பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.